சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1, ஜெயங்கொண்டம்
OS No.52/2024

2025–ம் ஆண்டு ஜூலை 24 ஆம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. கிருஷ்ணவேணி, கிரேடு 2 பென்ச் கிளார்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சாட்சி | : | வா.சா–1 | | | |
| பெயர் | : | ஜுவானந்தம் | கிராமம் | : | ஜெயங்கொண்டம் |
| த/பெ | : | கலியராஜன் | வட்டம் | : | உடையார்பாளையம் |
| வயது | : | 65 | தொழில் | : | நெசவு |

<u>முதல் விசாரணை</u>:–

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 25.07.1962 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.
2. 18.03.1994 தேதியிட்ட உயில் சாசனத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.
3. 03.02.2021 தேதியிட்ட எனது பெயரில் உள்ள மனைவரி பட்டா வா.சா.ஆ.3.
4. 17.05.2022 தேதியிட்ட 2 ம் பிரதிவாதி கொடுத்த கடிதம் வா.சா.ஆ.4.
5. வழக்கு சொத்துக்களை காட்டக்கூடிய தோராய வரைபடம் வா.சா.ஆ.5.

மேலும் ஆவணங்களை குறியீடு செய்யவேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ஒப்பம்/ V.பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.